Registered as a Newspaper

YAMAHA AGENCY
யமஹா அவுட்போட் மோட்டர் மீண்டும் 10-8-87 முதல் பருத்தித் துறை பிரதான வீதியில் இயங்கத்தொடங்கியுள்ளது.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
யமஹா ஏஜென்சி
பிரதான வீதி,
பருத்தித்துறை.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை
ரூ. 1-25

யமஹாஏஜென்சி
உங்களுக்குத் தேவையான சகலவிதமான யமஹா உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும், கிறுங், பிற்றிங் செய்து கொள்வதற்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்.
ஜோசப் மோட்டர் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

கவர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆவணி மீ 02 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 22 (18 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 226

இந்திய இராணுவம் நிலைகொண்டிருப்பினும்

# திருமலையில் அரச படையின் அட்டூழியம் தொடர்கிறது

## மக்கள் இன்னமும் அச்சம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 18

**இந்திய அமைதிப்படைகள் திருமலை மாவட்டத்தின் சில இடங்களில் நிலை கொண்டிருந்த போதிலும், ஸ்ரீலங்கா அரச படைகள் தமது அட்டூழியங்களைத் தொடர்கின்றன.**

**அதனால் அப்பகுதி குறிப்பாக கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்குச் செல்லவே அஞ்சுகின்றனர்.**

**ஜே. ஆர். ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்தான தினத்தன்றும், அதற்கு அடுத்த நாளும் சேர்த்து மொத்தம் 23 தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டனர்'**

இத்தகவல்களை திருமலை மாவட்டத்திற்குச் சென்று வந்த விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதித் தலைவர் திரு. மாத்தயாவும், பேச்சாளர் யோகியும் தெரிவித்தனர்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த புலிகள் இயக்க உள்ளூர் பிரமுகர்களும் பத்திரிகை யாளர் மாநாட்டில் பிரசன்னமாக இருந்தனர்.

பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:–

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பும் கிழக்குமாகாணத்தில் அரச படைகளின் அட்டூழியங்களும், சிங்களக் குடியேற்றங்களும் தொடர்கின்றன.

இலங்கை– இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான அதே தினத்தில் திருகோணமலையில், தோப்பூர் கிராமத்தில் 9 முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். அடுத்த நாள் 14தமிழர்கள் மல்லிகைத்

(4–ம் பக்கம் பார்க்க)

## இந்தியக் குழு கொழும்பு வருகிறது

புதுடில்லி, ஆக. 18

இந்திய அரசின் சட்ட நிபுணர் குழு இன்று செவ்வாய்க்கிழமை கொழும்புசெல்கின்றது.

இந்திய— இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத எஞ்சிய விஷயங்கள் பற்றி பேச்சுக்கள் நடத்தி முடிவு காணவே இந்தியக் குழு செல்கின்றது.

(இ-எ)

## எம்.பிக்களுக்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, ஆக. 18

'' இந்திய – இலங்கை ஒப்பந்தயோசனைகளுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் எம் பிக்கள் சுட்டுக் கொல்லப்படுவர்''

இப்படிக் கூறும் சுவரொட்டிகள் கொழும்பு மாநகர் எங்கும் ஒட்டப் பட்டுள்ளன.

இதனிடையில் கொழும்பு மாநகரின் முக்கிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவி நேரம் மாற்றம்

கொழும்பு, ஆக 18

யாழ்தேவி ரயில் பளையில் இருந்து கொழும்பு புறப்படும் நேரம் இன்று செவ்வாய் முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

காலை 10–15 மணி அளவில் பளையில் இருந்து யாழ்தேவி புறப்படும்.

கோட்டை ரயில் நிலையத்தை மாலை 6–15 மணிக்கு யாழ்தேவி சென்றடையும். (இ–எ)

## விடுதலைப் புலிகள் இன்று ஆயுதங்களை ஒப்படைப்பர்!

யாழ்ப்பாணம், ஆக. 18

தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று தமது ஆயுதங்களை இந்திய இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைப்பர் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

பலாலியில் உள்ள இந்திய அமைதிப் படையினரின் அலுவலகத்தில் ஆயுத ஒப்படைப்பு நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணம் திரும்பி தலைவர் பிரபாகரனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்தே ஆயுத ஒப்படைப்புக்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

ஆயுதஒப்படைப்பிற்கு இந்திய அதிகாரிகள் இன்றுவரை காலக்கெடு வழங்கியிருந்ததாக முன்னர் செய்திகள் வெளியானது தெரிந்ததே.

(உ.10)

## 24 ஆம் திகதி முதல் யாழ் ரயில் சேவை கொடிகாமம் வரை

யாழ்தேவிர்யில்சேவை இம் மாதம் 24ஆம் திகதியில் இருந்து கொடிகாமம் வரை விஸ்தரிக்கப் படவிருக்கின்றது.

காங்கேசன்துறை வரை ரயில் பாதையைத் திருத்துவதற்கு சுமார் பத்தாயிரம் சிலீப்பர் கட்டைகள்தேவைப்படுகின்றன.

(உ–எ)

## மகஸீன் சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குக! ராஜீவுக்கு சிங்கராயர் கடிதம்

யாழ்ப்பாணம், ஆக. 18

மகஸீன் சிறையில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு தேவையானநடவடிக்கை எடுக்குக.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு எழுதிய கடிதத்தில் வண. பிதா ஆபரணம் சிங்கராயர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் விடுதலை செய்யப்பட்டவண.பிதா சிங்கராயர் கடிதத்தில் கூறியிருப்பதாவது;

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பத்தொன்பது தினங்கள் கழிந்து விட்டன.

ஆனால் மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது எனக்கு பலத்த ஏமாற்றத்தைத் தருகின்றது.

சுமார் 260தமிழ்பேசும் அரசியல் கைதிகளும் ஒரு தொகை சிங்களக் கைதிகளும் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

அரசியல் கைதிகளின் உயிருக்கு உலை வைக்க மூன்று தரம் முயற்சிக்கப் பட்டது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட 29–7–1987 இல் எனது உயிரைப் பறிக்க இன்னொருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிராக இடம்பெற்ற வன்செயல்களில் கலந்து கொண்டவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் அந்தச் சிறையில் தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் தான் அரசியல் கைதிகளும் தற்சமயம் வைக்கப்பட்டுள்ளனர். (எ–51)

முச்சந்தி முரளி



சந்நதி கோயிலை இராமண்ணுமார் ஆலயத் தர்மகர்த்தாக்களிடம் கொடுத்து விட்டினமாம் இவ்வளவு காலமும் அங்கை இருந்து 'கும்பிட்டதாலை' பிறந்த ஞானோதயமோ ஆருக்குத் தெரியும்.

## சந்தித்தார்

குருநகர்,ஆக. 18

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் நேற்றுப் பிற்பகல் வண.பிதா ஆபரணம் சிங்கராயரை அவரது தாய் வீட்டுக்குச் சென்று சந்தித்தார்.

## தொண்டமானாறு முகாம் மூடப்பட்டது

### சந்நிதி ஆலயத்தில மக்கள் தரிசனம் பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருட்டு

வடமராட்சி, ஆக. 18

தொண்டமானாறுகிழக்குப் பக்கமாக இருந்த ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன.

இதனை அடுத்து பொது மக்கள் தமது குடியிருப்புகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீலங்காச் சிப்பாய்களின் தாக்குதல் காரணமாக சேதமடைந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்த செல்வச் சந்நிதி கோயிலுக்கு தற்போது பொது மக்கள் படையெடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

இந்தியத் துருப்புக்கள் இந்த ஆலயச் சுற்றுடலில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளை அகற்றிய பின்னர் பொது மக்களை ஆலயத்துக்குச் செல்ல அனுமதித்தனர். ஆலயத்தில் இருந்த பெறுமதி வாய்ந்த தங்க–வெள்ளி வேல்கள் கள

(4–ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் இன்று கூடுகிறது

கொழும்பு, ஆக 18

இன்று செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடுகின்றது. நாடாளுமன்றத்தைச் சுற்றி பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.

பொதுமக்கள் கலரி மூடப்பட்டிருக்கும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டாது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் பயன்தராது

# போராட்டத்துக்கு புதுவடிவம் அவசியம்

# தமிழர் ஒற்றுமையே முதற்தேவை

## கருத்தரங்கில் வலியுறுத்து

– அலுவலகச் செய்தியாளர்: கே. ரகுபரன் –

யாழ்ப்பாணம், ஆக. 18

★ இலங்கை—இந்திய ஒப்பந்தத்தினுல் தமிழ் மக்கள் பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை. அது தமிழர் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்திருக்கிறது:

★ எனினும் தமிழ் மக்கள் தமது போராட்டத்தை இத்தோடு நிறுத்திக் கொள்ள முடியாது. போராட்டத்தின் இரண்டாவது கட்டம் ஆயுதப் போராட்டம் அல்லாமல் வேறு வடிவம் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

★ அதற்குத் தமிழ் மக்களின் மத்தியில் ஒற்றுமையும், மக்கள் அரசியல்மயப்படுத்தலும் அவசியம்.

★ இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியஅரசு, தமிழர்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டது.

நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற 'இலங்கை இந்திய ஒப்பந்தமும், தமிழ் பேசும் மக்களின் எதிர்காலமும்' என்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட பலரும் மேற்கண்ட கருத்துக்களை முன் வைத்தனர்.

யாழ் பல் கலைக்சழக

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

18-8-1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:–
10.35 முதல் 12.05 வரை
ராகுகாலம்:–
3.05 முதல் 4.35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி காலை 7–46 வரை



கருத்தரங்கில் பங்குகொண்டோரில் ஒருபகுதியினரும் பார்வையாளர்களில் ஒருபகுதியினரும். (படம்:- ஜோண்சன்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★★★★★★★

விற்பனைக்கு

நல்லைநகர் நூல் யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல். கந்தையா குணராசா எம்; ஏ. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். (1465)

யாழ் பலாலி வீதியூடாக அச்செழு, நீர்வேலி 800 இலக்க பஸ் பாதையில் அமைந்த மின் வசதியுடைய செம்மண்காணி விற்பனைக்கு உண்டு. தொழிற்சாலை, பெருந் தோட்டச் செய்கைக்கு, உகந்தது விளம்பர எண் -62, மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (1476)

பிறந்தநாள் வாழ்த்து

யூசேப்பியஸ் அரன் மேரி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜோஅரன் தனதுமுதலாவது பிறந்த நாளை 15-8-87இல்அவுஸ்திரேலியாவில் குதூகலமாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, தாலையடி அப்பம்மா, அத்தைமார், செல்வக்குருசித்தப்பா, பாட்டி, பாட்டன், பெரியப்பாமார், பெரியம்மாமார், மற்றும் கொழும்பு அம்மம்மா, அம்மப்பா, உறவினர், நண்பர்கள் இவரைச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றார்கள். (1490)

# வடபகுதியில் போரூட் உதவி

## 25 கிராமங்களில் அபிவிருத்தித் திட்டங்கள்

வவுனியா, ஆக. 18

யாழ் குடாநாட்டு மக்களின் தேவைகள் அதிகம். குறிப்பாக மீனவர்கள், விவசாயிகள் ஆகியோர் மட்டுமன்றி வர்த்தகர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து புனர்வாழ்வு அளிப்பதற்காக போரூட் இயக்கம் திட்டங்கள் வகுத்துச் செயற்படுகின்றது.

போரூட் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி திரு. ஆரி எரிக்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் நகரில் சிறுவர்கள், தாய்மார்கள் மற்றும் போஷாக்குக் குறைந்தவர்களுக்கான சத்துணவுத் திட்டத்தை போரூட் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும்—

வட்டுக்கோட்டை, சங்கானை, ஊர்காவற்றுறை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் 25 கிராமங்களில் சமுதாய அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் திரு. எரிக்சன் தெரிவித்தார்.

வவுனியா தச்சன்குளம் விமானத்தள விஸ்தரிப்பைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட 80 குடும்பங்களுக்கு செங்கலடி புலவில் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றும் அமுல் செய்யப்படுவதாகவும் அவர் கூறினார். (இ-164)

### காரைநகரில் கம்பன் விழா

யாழ்ப்பாணம், ஆக. 18

செப்டெம்பர் முதல் வாரத்தில் காரைநகர் கம்பன் கழகத்தின் கம்பன் விழா இடம்பெறவுள்ளது.

பட்டிமண்டபம், கவியரங்கு, கருத்தரங்கு, 'இன்று சந்திக்கும் இவர்கள்', மேன்முறையீட்டு பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், இலக்கியப் பேருரைகள் ஆகிய நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறவுள்ளன. (இ)

### மக்கள் முகம்

## செல்வபுரம் கிராம அபி. சங்கம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 18

பளை செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: ந. பொன்னையா, உபதலைவர்கள்; யோ. பிச்சன், திருமதி வீ. சரஸ்வதி, செயலாளர்: சி. க. குணபாலசிங்கம், உதவிச் செயலாளர்: திருமதி. த. தவமணி, பொருளாளர்: ந. நல்லதம்பி, கணக்காய்வாளர்; பி. நடராசா,

நிர்வாகசபை உறுப்பினர்கள்: வ. சுசேல வைகுந்தராசன், சி. கதிரன், ஐ. வேலன், வ. குணசேகரம், பொ. விசாலாட்சி, செ.இராமலிங்கம், ச. இந்துமதி. (இ)

# மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப வேண்டும்

## அதுதான் இன்றுள்ள முக்கிய பிரச்சினை என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஆக. 18

வீட்டை இழந்தவர்கள், வீட்டைவிட்டு வெளியேறியவர்கள் முதலில் சொந்த இடங்களுக்குத் திரும்பவேண்டும். அதுதான் இன்று நம்முன்னே உள்ள தலையாயபிரச்சினை.

இப்படிச் சொன்னார் திருகோணமலை முன்னாள் எம். பி. இரா. சம்பந்தன்.

என் சொந்த வீடே திருமலையில் இல்லை. இது போல எத்தனையோ மக்கள் வீடிழந்து போய் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் பழைய இடங்களுக்குத் திரும்ப வேண்டும்.

அரசியல் பதவி, அதிகாரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அக்கறை இல்லை.

எமது பிரதேசம் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும், எமது பொருளாதாரம் கட்டி எழுப்பப்பட வேண்டும்: எம் மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும். இவைதான் முக்கியமானவை.

சுக்கு நூறாகிப்போயுள்ள எம்சமுதாயம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

இப்படி திரு. சம்பந்தன் கொழும்புச் செய்தியாளரிடம் சொன்னார். (இ-எ)

# பிரசைகள்குழுச் சேவை மேலும் தேவைப்படுகிறது

முள்ளியவளை, ஆக. 18

இங்கு தங்கியிருந்த அகதிகள் சிலர் தமது இருப்பிடங்களுக்குச் சென்று வசிக்க முடியாதபடி அவர்களின் இருப்பிடங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் இப்பகுதியிலேயே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. எனவே பிரசைகள்குழுக்களின் சேவை மேலும் தேவைப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள்குழுத் தலைவர் திரு. பொன். சந்திரசேகரி மேற்கண்டவாறு கூறினார்.

அம்பலவன் பொக்கணையில் திரு. தை. நவரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

முல்லைத்தீவு பிரசைகள் குழுச் செயலாளர் திரு.க. கதிரவேலு, திரு. இ. க. பத்மநாதன், திரு. நா. மகாலிங்கசிவம் ஆகியோரும் பேசினார்.

9 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-63

### பீடாரோஹண விழாவில் இந்தியபடையினர்

யாழ்ப்பாணம், ஆக. 18

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற பீடாரோஹண விழாவில் இந்திய இராணுவத்தினரும் கலந்து கொண்டனர்.

ஆதீன உள் மண்டபத்தில் பக்தர்களோடு அமர்ந்திருந்து பூசை நிகழ்ச்சிகளை அவதானித்த இவர்களுக்கும் ஏனைய அடியார்களுக்கும் தேநீர் வழங்கப்பட்டது

இந்திய இராணுவத்தினர் ஆதீன மண்டபங்களையும் ஆதீனகர்த்தரின் அறையையும் விசேடமாகப் பார்வையிட்டுச் சென்றனர்.

பொம்மர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இடங்களையும் இந்திய இராணுவத்தினர் பார்வையிட்டனர். (உ-161)

### விரைவில் காங்கேசனுக்கு ரயில்

கொழும்பு, ஆக 18

காங்கேசன்துறை வரையான வடபகுதி ரயில் சேவை மிக விரைவில் நடத்தப்படும்.

கொழும்பு ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் இப்படி அறிவித்திருக்கின்றது.

பளையில் இருந்து காங்கேசன்துறை வரை ரயில் பாதையைத் திருத்தி அமைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### சபை முதல்வரே சமர்ப்பிப்பார்

கொழும்பு, ஆக. 18

மாகாணசபைச் சட்டமூலத்தை சபை முதல்வரே (பிரதமர் பிரேமதாச) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

சட்டமூலத்தை அமுல் நடத்துவதில வழமையான நடைமுறைகடைப் பிடிக்கப்படும்.

அமைச்சரவைக்குள் கருத்துவேறுபாடு, எல்லா அமைப்புக்களினுள்ளும் இருப்பது போன்றதுதான்.

எதிர்ப்புப் பலமானதாக இருப்பின் அமைச்சரவையே இருக்காது. எதிர்ப்புக்கு மத்தியிலும் நாம் ஒற்றுமையாக பணி புரிகின்றோம்,

இப்படி அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார் [illegible]

# பட்ஜெட்டுடன் சம்பள உயர்வு

கொழும்பு, ஆக.18

அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு புதிய வரவு செலவுத்திட்டத்துடன் தான் வழங்கப்படும்.

—இப்படி நிதி அமைச்சர் ரொனிடிமெல் தெரிவித்தார்.

சம்பள உயர்வு வழங்க அரசுக்கு 260 கோடி ரூபா தேவைப்படுகின்றது.

சம்பள உயர்வு வழங்குவது சம்பந்தமான மதிப்பீடுகளைத் தயாரிக்கும்படி நிதி அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செலவினம் அடுத்த ஆண்டில் குறையும். அதன்நன்மை அரசு ஊழியருக்குச் சம்பள உயர்வாக வழங்கப் படும்.

—இப்படி நிதி அமைச்சர் சொன்னார். (உ-எ)

### ● அமைச்சர் மகனின் திருமணம்

கொழும்பு, ஆக. 18

அமைச்சர் காமினி ஜெயசூரியாவின்மகனின் திருமண வைபவத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, பிரதமர் பிரேமதாச ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்ட இந்த வைபவம் கடந்த வாரம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம் பெற்றது.

இந்திய—இலங்கை ஒப்பந்தம் குறித்து ஜனாதிபதியுடன் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்கள் பிரதமரும் அமைச்சர் ஜெயசூரியாவும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

### 5 கட்சிகள் கூட்டணி பிளவுபடாது

கொழும்பு, ஆக. 18

வடக்கு, கிழக்கு இணைப்புப் பிரச்சினை காரணமாக ஐந்து கட்சிகள் கூட்டணி பிளவுபடாது.

இப்படி சுதந்திரக்கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி (அத்தனகலை) தெரிவித்தார்.

இக்கூட்டணியில் சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி, லங்கா மக்கள் கட்சி ஆகியன அங்கம் வகிக்கின்றன. (இ-எ)

### ரூ. 300 கோடிக்கு மேல் சேதம்

கொழும்பு, ஆக. 18

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடுகள் உடமைகளுக்குஏற்பட்ட சேதம் 300 கோடி ரூபாவுக்கு மேல் இருக்கலாம்.

இப்படி புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

LANKA CEMENT LTD.

எமது பாவனையாளர்!
வாடிக்கையாளர்களுக்கு!!

ஓர் நற்செய்தி

மீண்டும்
"லங்கா சீமெண்ட்"
விற்பனைக்கு வந்து விட்டது

NEW GENERATIONS USE
LANKA CEMENT
FOR STRENGTH & DURABILITY
WE SAY IT
OUR CUSTOMERS CONFIRM IT

புதிய தலைமுறை நீண்ட நாள் பாவனைக்கும் உறுதிக்கும் இன்று பாவிப்பது
லங்கா சிமெண்ட்
நாம் சொல்லுகிறோம்
பாவனையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்

Head Office:-
M/s LANKA CEMENT LTD.
7th Floor,
130, W. A. D. Ramanayake
Colombo - 2. (Mawatha,
Phone— 54754, 547746 & 541358

Factory:-
M/s LANKA CEMENT LTD.
Keerimalai Road,
Kankesanthurai.
Phone—22605, 22810

# மிகவும் சிக்கலான காலக்கட்டத்தில் தமிழ் இனம்

## திலீபன் கூறுகிறார்

அச்சுவேலி, ஆக. 18

ஸ்ரீலங்கா – இந்தியஒப்பந்தம் ஈழத் தமிழ் மக்களை மிகச் சிக்கலான காலகட்டத்துக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டப் பாதையையும் மாற்றி நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கிவிட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு.திலீபன் மேற்கண்டவாறு கூறினார்.

ஆவரங்கால் சிவன் கோவிலடியில் நடைபெற்ற புலிகளின் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு திரு. திலீபன் மேலும் பேசுகையில், ஸ்ரீலங்கா – இந்திய ஒப்பந்தத்தை தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இறுதிமட்டும் எதிர்த்தனர்.

எமது எதிர்ப்பைப் பொருட்படுத்தாத இந்திய மத்திய அரசு எம் மீது அளவுக்கதிகமான நிர்ப்பந்தத்தைப் பிரயோகித்தது.

எமது உறுப்பினர்களின் உயிர்களைப் பலி கொடுத்துச் சேகரித்த ஆயுதங்களை இதனாலேயே நாம் ஒப்படைக்க முன் வந்தோம்.

ஆயுதத்தை ஒப்படைக்காவிடில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கை போன்று இந்திய இராணுவமும் எம்மீது நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அப்போது தேவையில்லாத உயிரிழப்பு ஏற்படும்.

அவ்வாறு உயிரிழப்பு ஏற்பட்டும் அது தமிழ் ஈழத்திற்கு சாதகமான முடிவைத் தருமானால் நிச்சயம் எதிர்த்துப் போராடி இருப்போம்.

ஒப்பந்தத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியும் சில குழுக்களும் ஆட்சேபிக்காமல் ஏற்றுக்கொண்டு தமிழ் இனத்திற்குத் துரோகம் இழைத்துவிட்டன.

இப்படி அவர்கூறினார். (இ-11)

### நெடுந்தீவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஆக. 18

நெடுந்தீவுப் பகுதியில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இரண்டு கலன் குடிதண்ணீர் மூன்று ரூபாவுக்கு அங்கு விற்பனை செய்யப்படுகிறது. (இ-10)

பிரயாண ஒழுங்குகள்

☆ பின்வரும் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்
எம்மிடம் உண்டு

★ சவூதி அரேபியா ★
✶ 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு

i. OPEN VISA
1. Carpenter – i
✶ இருப்பிடவசதியுடன் சம்பளம் 700 S.R.
2. Helpers for Carpenter – iv
(உதவியாளர்கள்)
✶ இருப்பிடவசதியுடன் சம்பளம் மட்டும் 550 S. R.
✶ 24 ஆம் திகதி பிரயாணம் செய்ய இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்

ii Cleaner (American Company)
✶ சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 500 S R.

★ ஈராக் (IRAQ)
✶ HOSPITAL CLEANERS
✶ 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு
✶ இருப்பிட வசதியுடன் சம்பளம் 65 டினார்.
✶ ஏற்கனவே பாஸ்போட் தந்தவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அவர்களுக்கு விசா தயாராக உள்ளது.
✶ பிரயாண ஒழுங்குகளின் திகதி பின்பு அறிவிக்கப்படும்

✶ தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
★ T. இந்திரநாதன் ★
M. THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

தூய மனத்துக்குச் சக்தி உண்டு. நன்மைக்கும் தீமைக்கும் ஊற்று நம் உள்ளத்தில் தான் இருக்கின்றது.

— ராஜாஜி

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22078
யாழ்ப்பாணம்:
18.8.1987  த.பெ.இல: - 23

## அவசரகாலச் சட்டத்தை நீக்காதிருப்பது ஏன்?

வடக்கு, கிழக்கில் இம்மாதம் பதினைந்தாம் திகதியுடன் அவசரகாலச் சட்டவிதிகள் நீக்கப்படும் என இலங்கை அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்து வந்தன.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான 48 மணி நேரத்தில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும். அதிலிருந்து 72 மணி நேரத்திற்குள் தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். இந்தக் காலவரையறைகள் நிர்ணயிக்கப்பட்டது போலவே வடக்கு — கிழக்கில் 15 ஆம் திகதியுடன் அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஆயுதங்கள் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. ஆனால் அதற்கான காலவரையறையை நீடிக்க வசதி செய்யப்பட்டது.

அதன் பிரகாரம் போராளிகள் தம்வசம் இருந்த ஆயுதங்களை ஒப்படைத்து வருகிறார்கள். கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் முன்னர் ஒரு தடவை குறிப்பிட்டது போல ஆயுத ஒப்படைப்புப் போன்ற விடயங்களில் ஒரு குறிப்பிட்ட காலவரையறையைக் கடைப்பிடிப்பது கஷ்டம். இதில் கொஞ்சம் வளைந்து கொடுக்கும் தன்மை வேண்டும்.

ஒப்பந்தப் பிரகாரம் தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தொடங்கிவிட்டார்கள்; ஒப்படைத்து வருகிறார்கள்.

ஆனால் அரசாங்கம் தான் கொடுத்த வாக்குறுதிப்படி வடக்குக் கிழக்கில் அவசரகாலச் சட்டத்தை நீக்கவில்லை.

ஆயுத ஒப்படைப்பு எதிர்பார்க்கப்பட்டது போல முடிவடையாததால் வடக்கு, கிழக்கில் அவசரகாலச் சட்டத்தை நீக்கமுடியாதிருப்பதாகக் காரணம் காட்டப்படுகிறது.

அரசாங்கம் போராளிகளை நம்பவில்லை என்பதையே இது காட்டுவதாக உள்ளது; ஆயுதங்களை ஒப்படைக்க ஆரம்பித்தவர்கள் இடைநடுவில் அதனை நிறுத்திக் கொண்டால் என்ன செய்வது என்று அரசு சந்தேகப்படுவதாகத் தோன்றுகிறது.

போராளிகளை மட்டுமென்ன? இந்தியாவையும் ஸ்ரீலங்கா அரசு நம்பவில்லை என்பதையும் இது தெளிவாக்குகின்றது. ஒப்பந்த அமுலுக்கு முழுப் பொறுப்பையும் இந்தியா ஏற்றிருக்கிறது. அப்படியிருக்க ஆயுத ஒப்படைப்புக் குறித்துச் சந்தேகம் கொள்வதும், அதன் பொருட்டு வடக்கு, கிழக்கில் அவசரகாலச் சட்ட விதிகளை நீக்குவதற்குத் தாமதிப்பதும் இந்தியா மீது போதிய நம்பிக்கை கொள்ளவில்லை என்பதைச் சொல்லாமற் சொல்வது போலாகும்.

இந்தியாவை, ஸ்ரீலங்கா அரசு வட்டாரங்கள் பூரணமாக நம்பியிருந்தால், ஆயுத ஒப்படைப்புக் குறித்து சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. முன்னர் அறிவித்தது போலவே இம்மாதம் பதினைந்தாம் திகதியுடன் தமிழ்ப் பகுதிகளில் இருந்து அவசரகாலச் சட்ட விதிகளை நீக்கியிருக்கலாம், தனது நல்லெண்ணத்தை நிரூபித்திருக்கலாம். அரசு அப்படிச் செய்யாது, ஆடத் தெரியாதவன் அரங்கு கோணல் என்று கூறியது போன்று, வழமையான விதண்டாவாதப் போக்கைக் கடைப் பிடிக்கிறது.

இந்த ஆரம்பக்கட்டத்திலேயே ஸ்ரீலங்கா அரசு இந்தியாவை நம்பாது, அணுப்புமாயின் ஒப்பந்த அமுல் விடயத்தில் எப்படி நடந்து கொள்ளப்போகிறது?

இவ்வாறாக ஸ்ரீலங்கா அரசு மீது போராளிகளும், தமிழ் மக்களும் நம்பிக்கை இழக்கவும் அரசின் நடத்தை வழி சமைக்கிறது.

அது மட்டுமல்ல, தமிழ்ப் போராளிகளின் ஆயுதங்களைப் பறித்துவிடுவதுதான் முழுமுதற் தேவை என்ற நோக்கில் அரசு செயற்படுகிறதோ என்ற சந்தேகமும் தானாகவே எழுகிறது.

வடக்கு, கிழக்கில் அவசர காலச் சட்ட விதிகளை நீக்காவிடில் ஜனாதிபதி போராளிகளுக்கு அளித்த பொது மன்னிப்பை செல்லுபடியற்றது ஆக்கலாம். அதாவது போராளிகளைக் கைது செய்யலாம். தடுப்புக் காவலில் இருந்தும், சிறைச்சாலைகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டவர்களை அவசரகாலச் சட்டத்தின் கீழும், அதனோடு ஒட்டி உறவாடும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் மீண்டும் கைது செய்யலாம்.

இவ்வாறான விஷத்தனமான எண்ணம் எதுவும் தனக்கு இல்லை என்று ஸ்ரீலங்கா அரசு தெளிவாக்க விரும்பினால், வடக்கு கிழக்கில் அவசரகாலச் சட்ட அமுலை உடனடியாக ரத்துச் செய்யவேண்டும். அப்படிச் செய்யுமா? கள்ள நோக்கம் எதுவும் தனக்கு இல்லை என்றுநிரூபிக்குமா?

### கட்டடம் இடிந்து விழுந்து 10 பேர் மரணம்!

பொலம், ஆக.17

12 மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 10 பேர் உயிரிழந்தனர். 18 பேர் படுகாயமடைந்தனர்.

அரைவாசி கட்டப்பட்ட நிலையில் இக்கட்டடம் இடிந்து விழுந்தது.

கட்டடத் தொழிலாளர்கள் சுமார் 30 பேர் வரையில் காணாமற் போய்விட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### எல்லைக்காந்தி பெஷாவார் சென்றார்

புதுடில்லி, ஆக. 18

97 வயதான எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் புதுடில்லியில் இருந்து விசேஷ விமானம் மூலம் பாகிஸ்தானில் உள்ள தனது சொந்த ஊரான பெஷாவாருக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

சென்ற மாதம் நான்காம் திகதி பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டதில் இருந்து மயக்க நிலையில் புதுடில்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எல்லைக் காந்தியுடன் விமானத்தில் அமைச்சர் என். டி. திவாரி உட்பட நான்கு அமைச்சர்களும் 5 எம்பிக்களும் சென்றனர்.

பிரதமர், விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்தார்.

90 நிமிடங்களில் விமானம் பெஷாவார் சென்றடைந்தது. (இ-எ)

# நடுவானில் விமானம் வெடித்துச் சிதறியது

## அமெரிக்காவில் 146 பேர் பலி!

வாஷிங்டன், ஆக.17

பயணிகள் விமானம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை இரவு டெக்ஸ்ரியோட் மாநிலத்தில் வெடித்துச் சிதறியதில் 146 பேர் உயிரிழந்தனர்.

விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் நடுவானத்தில் விமானம் வெடித்தது.

பின்னர் தீப்பந்தம் போன்று எரிந்து நகரின் பிரதான வீதியில் விழுந்தது.

நூறு யார் தூரத்துக்கு விமானத்தின் எரிந்த பகுதிகள் சிதறிக் கிடந்தன.

உயிரிழந்தவர்களில் 5 பேர் விமானிகள். ஏனையோர் பயணிகள்.

வீதியில் சென்று கொண்டிருந்த பொது மக்கள் சிலரும் காயமடைந்தனர். (இ-எ)

**வெளி உலகில்**

## ஒரே சமயத்தில் ஆயுதங்களை ஒப்படைக்க வழி செய்யப்படும்

திருச்சி, ஆக. 18

போராளிக் குழுக்கள் ஒரே சமயத்தில் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு வழி செய்யப்படுகின்றது.

இப்படித் தமிழ்நாடு உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இதன்மூலம் போராளிக் குழுக்களிடையேயான தவறான எண்ணங்கள், சந்தேகங்கள் நீங்கும்.

இந்திய-இலங்கை ஒப்பந்த அமுல் குறித்து பிரதமர் ராஜீவ்காந்தி, மற்றும் அமைச்சர்களுடன் பேச்சுக்கள் நடத்தினேன்.

ஆயுதங்கள் ஒப்படைப்பு எப்போது முடிவடையும் என்பதை இப்போதைக்குச் சொல்ல முடியாது.

இப்படி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# பிலிப்பீன்ஸில்

## பொதுமக்கள் துப்பாக்கி வைத்திருக்க முடியாது

மணிலா, ஆக. 17

பிலிப்பீன்ஸில் பொது மக்கள் துப்பாக்கிகள் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டமாட்டாது.

துப்பாக்கி வைத்திருக்க இதுவரை வழங்கப்பட்ட லைசென்சுகளை பிலிப்பீன்ஸ் ஆயுதப் படைத் தளபதி ரத்துச் செய்துவிட்டார்.

பொதுமக்களிடம் ஐந்து லட்சம் துப்பாக்கிகள் வரையில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சிப்பாய்கள், பொலிஸார், தேசியப் பாதுகாப்புச் சபையின் நிரந்தரத் தொண்டர்கள் ஆகியோரே இனி ஆயுதங்கள் வைத்திருக்க முடியும்.

இப்படி பிலிப்பீன்ஸ் படைத் தளபதி அறிவித்திருக்கின்றார். (இ-எ)

### மழைவேண்டி வேத யாகம்

சென்னை, ஆக.18

பண்டைய முறைப்படி மழை வேண்டி வேதம் ஓதும் நிகழ்ச்சி தமிழ் நாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் குன்னக்குடி வைத்தியநாதனும் கலந்துகொண்டு வயலின் இசைத்தார். (அ)

### உல்லாசப் பயணிகள்

இந்தஆண்டு 10 லட்சத்து 84 ஆயிரம் உல்லாசப் பயணிகள் இந்தியாவுக்கு விஜயஞ் செய்வர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படி அமைச்சர் ராஜேஸ்வர் டைட்லர் இந்திய லோக்சபாவில் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தார். (இ-எ)

## எவரெஸ்ட் சிகரமா கொகிர் மலையா உலகில் உயர்ந்தது?

பீகிங், ஆக. 17

இமயமலைத் தொடரில் உள்ள எவரெஸ்ட் சிகரம் தான் உலகிலேயே உயரமானது.

இப்படி சீனா வலியுறுத்தியுள்ளது.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் அமெரிக்க மலையேறும் கோஷ்டி ஒன்று சீன — பாகிஸ்தான் எல்லையில் உள்ள கொகிர் மலை தான் உலகத்திலேயே உயரமானது என்று அறிவித்திருந்தது. அதற்குப் பதில் அளிக்கும் முகமாகவே சீனா இப்படித் தெரிவித்தது.

கொகிர் மலை எவரெஸ்டிலும் பார்க்க 38 மீட்டர் (125 அடி) உயரமானது என்று அமெரிக்க மலையேறும் கோஷ்டி அறிவித்தது:

இதுபற்றி நியூசைனா நியூஸ் ஏஜன்ஸி ஸ்தாபனம் தெரிவித்திருப்பதாவது:

நேபாளம் — சீன எல்லையில் உள்ள எவரெஸ்ட் சிகரம் 8,843.13 மீட்டர் (29,029 அடி) உயரமானது.

சீன – பாகிஸ்தான் எல்லையில் உள்ள கரக்கோரம் மலைத் தொடரின் கொகிர் சிகரம் 8,606.13 மீட்டர் (28,851 அடி) உயரமானது,

இப்படி செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 17

பாகிஸ்தான் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபடுவது உறுதிப்படுத்தப்படுமானால், இந்தியா மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டிநேரிடும்.

இப்படி பிரதமர் ராஜீவ்காந்தி பி.பி.சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

# இந்தியா பெரிய சக்தி என்பது உண்மையே!

## உலக நாடுகள் இதனை ஏற்றுக்கொண்டுள்ளன

லண்டன் டைம்ஸ், நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்த பேட்டியின் நான்காவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: தீர்வுகாண எந்த அளவுவரை இந்தியா சொல்லித்தந்தது?

ஜே. ஆர்: ஒப்பந்தத்தில் மூன்று தரப்பினர் உள்ளனர். என்ன செய்ய வேண்டும் என்று இந்தியாவுக்கு நான் சொல்லிக் கொடுத்தேனா?

கேள்வி: அவர்கள் உங்களுக்குச் சொல்லித் தந்தார்களா?

ஜே. ஆர்: அதே கேள்விதான் எழுந்துள்ளது. பயங்கரவாதிகளுக்குப் புகலிடம் கொடுக்க வேண்டாம் என்று அவர்களுக்கு நான் சொன்னேனா? எம்முடன் சேர்ந்து கண்காணிப்புச் செய்யுங்கள் என்று நான் அவர்களுக்குச் சொன்னேனா? இவை இந்தியா முன்னர் செய்யாதவை ஆகும்.

கேள்வி; விமான எதிர்ப்பு துப்பாக்கிகளைப் பயங்கரவாதிகளுக்கு வழங்கப்போவதாக இந்தியா பயமுறுத்தியதா?

ஜே. ஆர்: இந்திமா பயமுறுத்தவில்லை; ஆனால்.இந்தியாகொடுத்துள்ளது.விமான எதிர்ப்புத் துப்பாக்கி பற்றி எனக்குத் தெரியாது. தாக்கும் ஆயுதம், அழிக்கும் ஆயுதம்– இரண்டுக்கும் வித்தியாசமில்லை. இதைத்தான் நாம் தொடர்ந்து கூறிவருகின்றோம். மத்திய அரசோ தமிழ்நாடு அரசோ? யார் கொடுத்தார்கள் என்பது தெரியாது. எம்மால் நிரூபிக்கமுடியாது.

கேள்வி: திருப்புமுனை எது? விமான மூலம் உணவுப் பொதி போட்டதா?

ஜே. ஆர்: இல்லை. நான் அப்படி நினைக்கவில்லை. அது திருப்புமுனை அல்ல. அது கூடாத அம்சம்.

கேள்வி: ஒப்பந்தம் பற்றி எப்போது பேசத் தொடங்கினீர்கள்?

ஜே. ஆர்: ''இலங்கையும் இந்தியாவும் ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும். இது சம்பந்தமாகப்பேசவேண்டும்''— இப்படி திரு, ராஜீவ் காந்தி எனக்குச் செய்தி ஒன்றை அனுப்பினர்.

முன்னர் வந்த தூதர்கள் எல்லாம் மத்தியஸ்தர்கள். தீவிரவாதிகளையும் எம்மையும் ஒன்று சேர்க்கப்பார்த்தார்கள். ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும் என்று இந்தியா ஆலோசனை கூறியது இதுவே முதல் தடவை.

கேள்வி: எப்போது இது இடம்பெற்றது?

ஜே ஆர்: ஜூலை நடுப்பகுதியில்.

கேள்வி: சர்வதேச ரீதியிலான விதிகள் கொண்ட கடிதம் ஜூலை 29 இல் கையெழுத்திடப்பட்டுள்ளது. அது பற்றி உங்களுடைய வெளியுறவு அமைச்சுக்குத் தெரிந்திருந்ததா?

ஜே ஆர்: ஒருவருக்குமே தெரியாது எனக்கு மட்டும்தான் தெரியும்.

கேள்வி: இதற்கு அவர்கள் எப்போது சம்மதித்தார்கள்?

ஜே. ஆர்: இந்தியப் பிரதமரும் நானும் இது பற்றி முன்னர் விவாதித்து வந்தோம். இப்பேச்சுக்கள் இரகசியமாக இருக்க வேண்டும் என்று எனக்கு ஆலோ[illegible] நான் 'மாட்டேன்' என்று சொன்னேன். பேச்சுக்களைப் பகிரங்கப் படுத்த வேண்டும் என்று சொன்னேன்.

கேள்வி: நாட்டின் இறைமையைச் சரணடைய வைக்கக் கூடிய விதத்தில் ஒப்பந்தம் இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றதே.

ஜே. ஆர்: என்ன தேவைப்பட்டாலும் சட்டமூலம் அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். நீதிமன்றம் வியாக்கியானம் செய்யலாம். நீதிமன்றம் நிராகரித்தால் நாம் மேலே சொல்ல முடியாது. இரு தலைவர்களும் பரிமாறிக் கொண்ட கடிதங்களும் நாடாளுமன்ற அரசமைப்பு நடைமுறைக்குள் அடங்கா. கலந்தாலோசிக்காமல் நாம் ஒன்றுமே செய்வதில்லை.

கேள்வி: இலங்கை வெளியுறவுக் கொள்கையின் சில அம்சங்களில் இந்தியாவுக்கு அக்கறை உண்டு என்பது ஒப்பந்தத்துடனான இணைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதே.

ஜே. ஆர்: ஆம். அது போல இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையிலும் எமக்கு அக்கறை உண்டு.

கேள்வி: ஒப்பந்தத்தின் செயற்பாடு அந்த வழியில் அமையவில்லை என்று நான் நினைக்கின்றேன்.

ஜே.ஆர்: அதனால் தான் கலந்தாலோசனை என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

கேள்வி: ஒன்று தெளிவாகத் தெரிகின்றது. இப்பிராந்தியத்திலேயே இந்தியா பெரிய சக்தி என்பதையும் அதன் அக்கறையைக் கவனிக்க வேண்டும் என்பதையும் இலங்கை ஏற்றுக் கொண்டு விட்டது என்பதே அது.

ஜே. ஆர்: அதுதான் [illegible]?

கேள்வி: இரண்டு நாடு

(4 ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

**குறள்:**
இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

**பொருள்:**
பெரிய உவகையால் மகிழ்ந்து இருக்கும் போது மறதியால் வரும் சோர்வு ஒருவனுக்கு வரம்பு கடந்த சினம் வருவதைவிடத் தீமையானதாகும்.

# குருமகா சந்நிதானத்தையும் நாவலரையும் சைவத்தமிழ் உலகு மறக்கவே முடியாது

யாழ்ப்பாணம், ஆக. 18

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நல்லை நகரில் பிறந்து வண்ணை நகரில் தொண்டாற்றினர். ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வண்ணை நகரில் பிறந்து நல்லை நகரில் தொண்டாற்றினர். சமயப்பணி புரிந்த இந்த இருவரையும் சைவத் தமிழ் உலகம் என்றுமே மறக்க முடியாது.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற 21 ஆவது ஆண்டு பீடாரோஹண விழாவில் ஆசியுரைவழங்கிய திரு. வை. நித்தியானந்தசர்மா மேற்கண்டவாறு கூறினர்.

காலை 6 மணி முதல் நடைபெற்ற பூஜைகள், வீதி பஜனை, ஸ்நபன அபிஷேகம், பீடாபிஷேகம் முதலானவற்றைத் தொடர்ந்து கொலு பூஜை வெகு கோலாகலமாக நடைபெற்றது.

கொலுபூஜையை அடுத்து நடைபெற்ற ஆசியுரையில் திரு. வை. நித்தியானந்த சர்மா தொடர்ந்து கூறியதாவது:

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தொண்டையினால் தொண்டு புரிந்தே ஆதீனத்தை வளர்த்தார்கள். ஆதீனத்தை வளர்த்தது மாத்திரமன்றி தனக்குப் பின் ஆதீனத்தை வளர்ப்பதற்கென தனது வாரிசாக இரண்டாவது குருமகா சந்நிதானத்தைச் சைவத்தமிழ் உலகுக்குத் தந்துவிட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

அவரது ஞானசீடனே இன்றுஆதீன பீடத்திலே கொலு வீற்றிருக்கின்றார்.

முதலாவது குருமகா சந்நிதானம் கொலு வீற்றிருந்த இத்தினத்திலே இரண்டாவது குருமகா சந்நிதானம் கொலு வீற்றிருந்து அருள் பாலிக்கும் இவ்வேளையில் பூரண அருளை இன்று பெற்றுய்யப் போகின்றீர்கள்.

திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானமாக விளங்கிய இருவரும் ஒரே தோற்றமுடையவர்களாகவும் ஒரே நிறமுடையவர்களாகவும் காணப்படுவது ஆதீனத்தின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

இப்படி அவர்கூறினர்.

ஸ்ரீலஸ்ரீ ச. சாம்பசிவக்குருக்கள் ஆசியுரை வழங்கும்போது; மக்கள் மத்தியில் குரு பக்தியை வளர்ப்பதற்காகவே ஆண்டுதோறும் பீடாரோஹண விழாவைக் கொண்டாடுகின்றோம் என்றார்.

செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆசியுரை வழங்கும் போது இன்று பீடத்திலே கொலு வீற்றிருக்கும் இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள் வயதில் மிகக் குறைந்தவர் என்பதற்காக அவரை நாம் குறைவாக மதிக்கக் கூடாது என்றார்.

செல்வன் இ. ஜெயராஜ் நூல் அறிமுகவுரை நிகழ்த்தினர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் 'பட்டணப் பிரவேசம்' கோலாகலமாக நடைபெற்றது.

என். கே. பத்மநாதன் எஸ். சிதம்பரநாதன் குழுவினர்களின் மங்கள இசையுடன் பட்டணப் பிரவேசம் நடைபெற்ற போது வீதியில் உள்ள வீடுகள் தோறும் பூரண கும்பங்கள் வைத்து, மாலை சூட்டி சுவாமியைக் கௌரவித்தனர்.

பட்டணப் பிரவேசத்தை அடுத்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

(இ-161)

**சமய சந்நிதிகளில்**

### சுட்டிபுரம் அம்மன்கோயில் திருவிழா

கொடிகாமம், ஆக. 18

வரணி சிட்டிபேரம் (சுட்டிபுரம்) கண்ணகை அம்மன் கோயிலில் திருவிழா 24-ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

அன்றுகாலை விசேஷ அபிஷேகம்நடைபெறும்.

இரவு நாதஸ்வரம் மேளக்கச்சேரிகள்விசேஷ சப்பறங்களுடன் நடைபெறும்.

இதற்கிடையில் கடந்த ஜூலையில் இடம்பெற்ற 'ஹெலித் தாக்குதலால் இந்த ஆலயத்துக்கு ஏற்பட்ட சேதத்தைச் சீர் செய்யப் பொது மக்களின் உதவி தேவைப்படுவதாக கோயில் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

(இ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"TOEFL"
Classes – back at old haunt
No. 23, 3rd Cross Street – Jaffna.
For further particulars.
Contact:
**Victor S. Kiruparaj**
at above address

**உதயன்**

18 - 08 - 1987 செவ்வாய்க்கிழமை

"TOEFL"
வகுப்புக்கள் மீண்டும் வழமையான முகவரியில்
23, மூன்றும் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
வேறு தகவலுக்கு:
தொடர்புகொள்ள வேண்டியவர்:
**விக்டர் எஸ். கிருபைராஜ்**
மேற்காணும் முகவரியில்

# நயினாதீவு படைமுகாம் அகற்றப்படவேண்டும்

யாழ்ப்பாணம், ஆக. 18

நயினாதீவு மக்களின் அமைதி வாழ்க்கையைக் கருதி இலங்கைக் கடற்படை முகாமை அங்கிருந்து அகற்றவேண்டும்.

நயினாதீவு பிரசைகள் குழுத் தலைவர் திரு. க. வே. பரமலிங்கம் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடம் சமர்ப்பித்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை நயினாதீவுக்கு இந்திய, இலங்கை, யாழ் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் விஜயம் செய்தனர்.

அப்போதே இந்த மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது:

நயினாதீவில் உள்ள பௌத்த விகாரையைத் தேவையானால் பாதுகாக்க இந்திய அமைதிப் படையினரைப் பயன்படுத்தலாம்; அல்லது சர்வசமயப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றை நியமிக்கலாம் என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரில் கடந்த காலங்களில் நயினாதீவு மக்கள் அடைந்த இன்னல்கள், துன்பங்கள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது:

நயினாதீவுக்குச் சென்ற

## இந்திய செஞ்சிலுவை சங்கத்திடம் மகஜர்

செஞ்சிலுவைச் சங்கக் குழுவை, நயினை நாகபூஷணி ஆலயத் தர்மகர்த்தா சபைத் தலைவரும் யாழ் செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான திரு. த. குலசேகரமும் மக்களும் வரவேற்றனர்.

பூசை வழிபாட்டின் பின்னர் திருமண மண்டபத்தில் நடந்த மதிய போசன விருந்தில் அவர்கள் கலந்துகொண்டனர்.

பின்னர் குழு பௌத்த விகாரைக்குச் சென்றது. பின்னர் அரசின் மருத்துவ மனையைப் பார்வையிட்டது:

அம்பாளின் தேவஸ்தானத்துக்கு ஏற்பட்ட சேதங்களை, சுற்றுடலில் ஏற்பட்ட சேதங்களைக் குழு பார்வையிட்டது.

நயினை அமுதசுரபி அன்னதான மண்டபத்துக்கு விஜயம் செய்த குழுவுக்குத் தேநீர் விருந்துபசாரமளிக்கப்பட்டது. (இ-எ)

## பல்கலைக்கழக மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 18

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான அவசரப் பொதுக்கூட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இந்தியா---

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் என்பதுதான் உண்மை?

ஜே.ஆர்: நல்லது. அப்படி என்று நான் எண்ண மாட்டேன். ஆனால் இப்பிராந்தியத்தில் இந்தியா பெரிய சக்தி என்பது உண்மை. உலக வல்லரசுகள் இதை ஏற்றுக் கொண்டுள்ளன.

கேள்வி: பின்லாந்துடன் ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளதே. பெரிய நாடு, சிறியநாடு என்ற உண்மைநிலை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஜே.ஆர்: ஒப்பந்தத்தின் எந்தப் பகுதியோ அல்லது இணைப்போ அப்படியான கருத்தை வெளிப்படுத்தவில்லை.

(வளரும்)

# போராட்டத்துக்கு புதுவடிவம்----

(3- ம்பக்கத்தொடர்ச்சி)

பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி தமது உரையில் கூறியதாவது:

போராளிகள் குழுக்கள் எல்லாமே இந்த ஒப்பந்தத்தை ஏற்க வேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

தமிழும் ஆங்கிலமும் உத்தியோக மொழி ஆக்கப்படுவதைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்பிரயோகத்திலும் சிக்கல் இருக்கின்றது.

இடைக்கால ஆட்சி நிர்வாகம் எவ்வாறு அமையும் என்ற பிற முக்கிய விடயங்களிலும் தெளிவு இல்லை.

வடக்கு, கிழக்கு இணைப்பானது அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறும் வரையிலேயே நிச்சயமானது:

மேலும் இணைப்பு சாதாரண பெரும்பான்மையினாலேயே நிராகரிக்கப்பட்டுவிடும் என்பதும் மிகவும் பாதகமானதாகும்.

தமிழருக்கிடையில் அமைப்பு ரீதியிலான ஒற்றுமையின்மையே எங்கள் பிரச்சினைகளுக்கு பெரிதும் காரணமாயிற்று. இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து நடக்காவிடில் உண்மைச் சுதந்திரத்திற்கு இடமே இல்லாமற் போய்விடும்.

இதுவரை காலமும் தமிழ்ப்போராளிகள் தமிழ் நாட்டுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார்கள். இந்த ஒப்பந்தத்தால் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டு விட்டார்கள்.

போராளிகள் இதுவரை காட்டிய இராணுவத் திறமையை இனிமேல் இராஜதந்திரத்தில் காட்டவேண்டும்.

இத்தனை பாரிய அழிவுகளுக்குப் பின்னர் ஏற்படும் தீர்வு இடைக்காலத் தீர்வாக அமையக் கூடாது.

இனிமேல் இங்குள்ள சமூகக் குறைபாடுகள் களையப்பட வேண்டும். போராட்ட வடிவம் மாறலாம் இலட்சியம் மாறக்கூடாது. மக்கள் போராட்டத்திற்கான கேடயங்கள் அல்ல. ஆயுதங்கள்தான் மக்கள் என்பது உணரப்பட வேண்டும்.

இவ்வாறு திரு. சிவத்தம்பி கூறினார்.

### உரிமை பறிபோகலாம்

தலைமையுரை நிகழ்த்திய விரிவுரையாளர் ஜனாப் சித்திக் கூறியதாவது:

இந்த ஒப்பந்தத்தால் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படவில்லை.

இந்திய அரசு தனது பிரதேச எல்லையை விஸ்தரிப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கையே இது.

தமிழருக்கு சுயநிர்ணய உரிமை எதுவும் இதனால் ஏற்படவில்லை. சிங்களவர்களைத் திருப்திப்படுத்தவே அரசு முயலும். எதிர்காலத்தில் தமிழர் உரிமை மேலும் பறிக்கப்படலாம்.

ஜே. ஆர், வடக்குக் கிழக்கு இணைப்புக்கு எதிராகப்பிரசாரம் செய்யப்போவதாகவும் கூறுகிறார்.

—இவ்வாறு ஜனாப் சித்திக கூறினார்.

செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. இ. பாலசுப்பிரமணியம் தமது உரையில் கூறியதாவது:-

தமிழ் மக்களுடைய இறைமை அவர்களிடமே உள்ளது. அதனை வேறு எவரும் வழங்க வேண்டியதில்லை. இறைமையைப் பயன்படுத்தித் தங்களை ஆளும் அதிகாரத்தை அவர்கள் உருவாக்க உரிமை உடையவர்கள்.

ஒற்றையாட்சியின் கீழ் வடக்குக் கிழக்கிற்கு வழங்கப்படவிருக்கும் அதிகாரங்கள் எவை எனச் சொல்லப்படவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால் இத்தீர்வு சுவையில்லாத வாழைப்பழம் போன்றது.—என்றார்.

### போராளிகளே காரணம்

முன்னாள் யாழ் மேயர் திரு. ராஜா விஸ்வநாதன் பேசுகையில்: தமிழருடையபோராட்ட வரலாறுகளை விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த ஒப்பந்தம் பல குறைபாடுகளை உடையது. எனினும் 30 வருடங்களின் பின்பாவது தமிழரின் பாரம் பரிய பிரதேசமும் தமிழ் இனம் ஒரு தேசிய இனம் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இத்திருப்பு முனைக்கு மூலகாரணம் போராளிகளே.

### ஒற்றுமை அவசியம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர்களுள் ஒருவரான திரு. வே. கைலாசபிள்ளை உரையாற்றும் போது கூறியதாவது:-

எல்லாப் போராளிகளும் தொடர்ந்து வேறு வழிகளிற் போராட வேண்டும். மக்கள் ஒற்றுமையாக இணைய வேண்டும். முஸ்லிம் மக்களுக்கு நாம் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்.—என்றார்.

### அமைதி என்றால் என்ன?

சென். பற்றிக்ஸ் அதிபர் வண. பிதா மைக்கல் ஜோசப் அவர்கள் தமது உரையில் கூறியதாவது:

அமைதி என்பது போரின்மை; எதிரிகளின் சமநிலை என்பவை மட்டுமல்ல, மாறாக நீதியின் நிலைப்பாடே அது:

இந்த வகையில் இப்போது ஏற்பட்டிருப்பது அமைதியல்ல. இது மன அமைதியல்ல; மயான அமைதியே:

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மு. திருநாவுக்கரசு தமது உரையில் —

போராட்டம் என்பது இராட்சதத் தூண்களைத் தலையால் அடித்து வீழ்த்தும் முயற்சியாகும்: எமது போராட்டமும் அத்தகையதாகவே அமைந்துவிட்டது:

தமிழர் பகடைக் காயாக்கப்பட்டுள்ளனர். இந்தியா எப்போதோ எடுத்த முடிவை இப்போது நிறைவேற்றியிருக்கிறது:

எமது இந்தத் தோல்விக்கு எமது முழுச் சமூகமே காரணம். முக்கிய காரணம் அறிஞர்களே. போராட்டத்தில் அறிஞர்கள் ஈடுபடாமையாலேயே இந்த நிலை ஏற்பட்டது. இளைஞர்கள் ஜனநாயக மீறல்களில் ஈடுபட்டார்கள். அதனால் தான் இந்தியா தலையிட்டது — என்றும் கூறினார்.

கருத்தரங்கில் ஈழநாடு உதவி ஆசிரியர் திரு. வி. மாணிக்கம், உதயன் ஆசிரியர் திரு. எம். வி.கானமயில்நாதன், முரசொலி ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம், ஈழமுரசு உதவி ஆசிரியர் திரு. த. சர்வேந்திரா ஆகியோரும் உரையாற்றினர். (உ)

# திருமலையில்---

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

தீவில் கொலை செய்யப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் கிராமங்கள் அனைத்தும் 1983 ஆம் ஆண்டின் பின்னர் முற்று முழுதாக அழிக்கப்பட்டுள்ளன.

ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறிஉள்ளனர் தமிழ் மக்களின் வீடுகளில் சிங்களவர்கள் திட்டமிட்டு குடியேற்றப் பட்டுள்ளனர்.

சீனன் குடாவில் உள்ள கிளியன் பெக் என்ற இடத்தில் உள்ள அகதிகள் முகாமில் சுமார் ஆறாயிரம் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர்.

துப்பாக்கி ஏந்திய ஊர்காவல் படையினரேயே இவர்களை இன்னமும் காவல் புரிந்துவருகின்றனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் இவர்கள் அனைவரும் சொந்த இடங்களுக்கு திரும்ப வேண்டும்என்றும் இல்லையேல் உணவு வழங்கப்போவதில்லை எனவும் எச்சரித்துள்ளனர்.

எனினும் தமிழ் மக்கள் திரும்பிச் சென்று வாழக்கூடிய நிலையில் திருமலைக் கிராமங்கள் பல இல்லை என்பதே உண்மையான நிலையாகும்.

திருகோணமலையில் இந்திய இராணுவத்தினரின் நடமாட்டங்களும் குறைந்திருப்பதன் காரணமாக தினமும் ஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும் தமிழ் மக்களைத் தாக்கியும் கொலை செய்தும் வருகிறார்கள்.

மூதூர் பிராந்தியத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் திரு. சஞ்சை, திரு. ரமேஷ் தம்பலகாமம், பன்குளம், கந்தளாய் பிரதேசங்களைச் சேர்ந்த திரு. கபிலன், திரு. வசந்த், திருமலை மாவட்டப் பொறுப்பாளர் பதுமன் ஆகியோர் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் பிரசன்னமாக இருந்தனர்.

(அ-10)

## எம் பிக்களுக்கு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

முப்படைத் தளபதிகள், பொலீஸ் மா அதிபர் அடங்கிய உயர் மாநாடு ஒன்று கடந்த ஞாயிறு நடைபெற்றது.

பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவது என்று மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து கொழும்பு மாநகர் ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பொலீஸாரின் பணிப்பின் கீழ் தான் இராணுவத்தினர் கடமை புரிவர்.

கொழும்பு மாநகருக்குள் நுழையும் வாகனங்கள் கடும் சோதனைக்குள்ளாகின்றன. (உ-எ)

## தொண்ட--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாடப்பட்டுள்ளன.

வள்ளி - தெய்வானை தங்க விக்கிரகங்களும் அகற்றப்பட்டிருந்தன.

இந்தவருடம் உற்சவம் நடைபெற மாட்டாது என்று ஆலயத்தின் பிரதம செயற்குழு உறுப்பினரான வி. தெய்வேந்திரன் ஐயர் தெரிவித்தார். உற்சவம் நடைபெற இருப்பதாகக் கூறி நிதி சேர்க்க வருவோர் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் படியும் இவர் கேட்டுக்கொண்டார்.

ஆலய சுற்றுடலில் குப்பை கூளங்களும் எலும்புக்கூடுகளும் காணப்படுகின்றனஎன்று தெரிவிக்கப் படுகின்றது.

(இ-160)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்
அதிர்ஷ்டப் பயணப் போட்டி

பெயர் ____________________
முகவரி ____________________

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?
உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?

உதயன்/சஞ்சீவி
யாழ். மாநகரசபைப்பகுதிக்கான
உதயன்/சஞ்சீவி
விநியோகம் நாளைமுதல்
அருண் மார்க்கட்டிங் சேர்விஸஸ்
நிறுவனத்திடம்
ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

உங்கள் விநியோகத்திற்குத் தேவையான பத்திரிகைகளை அருண் நிறுவனத்துடன் உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுங்கள்.

-நிர்வாகி
(உதயன் பப்ளிகேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட்)

★ மலிவு விற்பனை! ★ மலிவு விற்பனை!! ★ மலிவு விற்பனை!!!



நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு மலிவு விற்பனை ★
வாருங்கள்! வந்து பார்த்திடுங்கள்!! பார்த்துத் தேர்ந்தெடுங்கள்!!!



# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

256, பருத்தித்துறை வீதி, :-: நல்லூர்.
(நல்லூர் கோவில் முன்பாக)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி: 18-08-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Tuesday August, 18 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org